இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 14-05-2023

# திராவிடப் பண் பாடுவோம் 3

ஆரியம் அடிமைப்படுத்தி வைத்திருந்தது, 'சூத்திரர்கள்' என்ற போர்வையில் மனிதர்களையும், அனைத்து இனப் பெண்களையும். மனுவில் அதிகம் இழிவு செய்யப்பட்டு இருப்பவர்கள் சூத்திரர்களும், பெண்களுமே! எனவேதான் பெரியார் இந்த இரு இழிவுகளைத் துடைக்கவே கிளம்பினார்.

'திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை என்பது சாதி ஒழிப்பும், பெண்ணுரிமையும்' என்று அறிவித்தார். ஒன்று ரத்த பேதம் இல்லை என்பது. இன்னொன்று பால் பேதம் இல்லை என்பது. இந்தத் தத்துவங்களை மையமாகக் கொண்டு கட்சியை நடத்துவதும், அந்தத் தத்துவங்களை வென்றெடுக்கும் திட்டங்களை ஆட்சியில் இருக்கும்போது நிறைவேற்றுவதும் தான் 'திராவிட மாடல்' ஆட்சியாகும். 'திராவிட மாடல் என்ற ஒரு நிர்வாகமே கிடையாது' என்கிறார் ஆளுநர்.

**வரலாற்றைப் படித்தவர்களுக்குத் தெரியும். ஒவ்வொரு கோட்பாடும் ஒவ்வொரு சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்டவை என்று. மார்க்ஸும் ஏங்கெல்சும் உருவாக்கிக் கொடுத்த கோட்பாட்டின் அடிப்படையில் சோவியத் நிர்வாகக் கட்டமைப்பை ஒழுங்கு செய்தார்கள் லெனினும் ஸ்டாலினும். அதில் பண்பாட்டு விழுமியங்களையும் இணைத்தார் சீனாவில் மாவோ. ஏகாதிபத்திய எதிர்ப்பை முன்னுக்கு வைத்தார் பிடல் காஸ்ட்ரோவும் சேகுவேராவும். இவை அனைத்தும் மார்க்சியமாகவும், லெனினியமாகவும், ஸ்டாலினிசமாகவும், மாவோயியமாகவும், பிடல் வழியாகவும், சே வழியாகவும் உலகில் பேசப்பட்டு வருகின்றன. அத்தகைய தன்மை கொண்டதுதான் பெரியாரியம். பெரியாரியத்தின் கோட்பாட்டுக்குள் அண்ணாவும், கலைஞரும் உரம் சேர்க்கிறார்கள். இதன் ஒட்டுமொத்த கூட்டுச் சேர்க்கையாக இன்றைய முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்.**

இன்றைய பா.ஜ.க. ஆட்சியை 'தேசிய ஆட்சி' என்று அடையாளம் காட்ட முடியாது. எந்த தேசியம் என்ற கேள்வி எழும். இவர்களது சிந்தாந்த குருநாதர்களான கோல்வால்கரும், ஹெட்கேவரும் சொல்வது எல்லாம் 'கலாச்சார தேசியம்' ஆகும். அதாவது இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்தியர்கள் என்பதை இவர்கள் ஏற்க மாட்டார்கள். 'இந்துப் பண்பாட்டை ஏற்றுக் கொள்பவர்கள் மட்டுமே இந்தியர்கள்' என்று சொல்வார்கள். இதன் அடிப்படையில் தான் பா.ஜ.க. செயல்பட்டு வருகிறது.

இப்படி ஒரு நிர்வாகத்தை நடத்தும் இவர்களைப் பார்த்து, 'பா.ஜ.க. மாடல் நிர்வாகம் என்ற ஒரு நிர்வாகமே கிடையாது' என்று நம்மாலும் சொல்ல முடியும். தங்களது கொள்கைக்கு ஏற்ப இவர்கள் செய்துகொள்ளும் நிர்வாக ஒழுங்கு அவர்களது பாணியாக இருப்பதைப் போல, திராவிடக் கொள்கைக்கு ஏற்ப நாம் செய்து கொள்ளும் நிர்வாக ஒழுங்குக்கு 'திராவிட மாடல்' என்று பெயர்.

நீதிக்கட்சி 1920 ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாணத்தில் ஆட்சிக்கு வருகிறது. 'எல்லோரும் படிக்கலாம்' என்ற அரசாணையை 9.3.1923 அன்று போடுகிறது. அதுவரை இன்னார் படிக்கலாம், இன்னார் படிக்கக் கூடாது என்று இருந்தது. அதனை மாற்றி அமைக்கிறது இந்த அரசாணை. படிக்க வந்த அனைவருக்கும் இடமோ, வேலையோ கிடைக்கவில்லை. உடனே, சமூக ரீதியாக இடஒதுக்கீட்டை வழங்குகிறது நீதிக்கட்சி. யாருக்கெல்லாம் இடம் கிடைக்கவில்லையோ அவர்களுக்கு இடம் கிடைக்கச் செய்கிறது இந்த இடஒதுக்கீட்டு வகுப்புரிமை. மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் ஒரு தகுதியாக இருந்துள்ளது. அதனை நீக்குகிறது நீதிக்கட்சி.

வேண்டியவர்களை மட்டும் கல்லூரிக்குள் படிக்க அனுமதித்த முறையை மாற்றி, கல்லூரிக் குழு அமைத்து மாணவர்களைத் தேர்வு செய்தது நீதிக்கட்சி. பட்டியலின மக்கள் படிக்க ஊக்கத்தொகை தரப்பட்டது. அனைத்து மாணவர்களுக்கும் கல்லூரிக் கல்விக்கு ஊக்கத்தொகை தரப்பட்டது. விடுதிகள் திறக்கப்பட்டன. பெண்களுக்கு எட்டாம் வகுப்பு வரை இலவசக் கல்விக்கு வழிவகை செய்யப்பட்டது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்கப்பட்டது. இரவுப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. பஞ்சாயத்து வாசக சாலைகள் உருவாக்கப்பட்டன.

1926 ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆட்சியில் கல்வி அமைச்சராக இருந்த ஏ.பி.பாத்ரோ மதுரை மாநாட்டில் பேசும் போது, தமிழ்நாட்டில் இருந்த 78 நகராட்சிகளில் 26 நகராட்சிகளில் இலவச கட்டாயக் கல்வி தரப்படுவதாகச் சொன்னார். சாதிப் பாகுபாடு காட்டி யாரையும் கல்வி நிலையங்களில் சேர்க்க அனுமதி மறுக்கக் கூடாது என்று அரசாணை போடப்பட்டது. அப்படிச் செய்யும் கல்வி நிறுவனத்தின் அனுமதி ரத்து செய்யப்படும் எனவும் அரசாணை போடப்பட்டது. இதனைத் தான் 'திராவிட இயக்கத்தின் நோக்கம்' என்கிறோம்.

நீதிக்கட்சியின் புகழ் பாடுகிறோம் என்றால் இதனால்தான். பேசினார்கள், எழுதினார்கள், பத்திரிக்கை நடத்தினார்கள் என்பதற்காக அல்ல; சீர்திருத்த ஆட்சியை நடத்தினார்கள் நீதிக்கட்சியினர். அதனால்தான் அதற்கு மகுடம் சூட்டுகிறோம். இதன் தொடர்ச்சியைத் தான் பேரறிஞர் அண்ணாவும், தமிழினத் தலைவர் கலைஞரும் செய்து காட்டினார்கள். இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்திக் காட்டிவருகிறார்கள்.

**இந்த நூற்றாண்டின் பல்வேறு வளர்ச்சிக்கு திராவிடவியல் கோட்பாடு அடித்தளம் அமைத்துள்ளது. சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சியைக் கண்ணுக்கு முன்னால் காட்டி விட்டது. அதனால்தான் இதனைப் பார்த்து கோபம் கொள்கிறார்கள். 'திராவிடர் - சூத்திரர்' என்று பிரித்த சக்திகளே அப்படி எதுவும் இல்லையே என்று சொல்லும் அளவுக்கு இக்கோட்பாடு சாதனையைச் செய்துள்ளது. அடிமை எதிர்க்கத் தொடங்கியதும் சங்கிலியை அவிழ்த்துவிடுவது போல இருக்கிறது ஆரிய - திராவிடப் பிரிவினை என்பதெல்லாம் இல்லை என்பவர் கூற்று. ஆளுநரின் காலாவதிப் புலம்பலும் இந்த வகைப்பட்டது தான்.**

"திராவிடம் என்பது காலாவதியான கொள்கை அல்ல. சனாதனத்தைக் காலாவதி ஆக்கியது திராவிடம். வர்ணாசிரமத்தைக் காலாவதி ஆக்கியது திராவிடம். மனுநீதியைக் காலாவதி ஆக்குவது திராவிடம். சாதியின் பேரால் இழிவு செய்வதை காலாவதி ஆக்குவது திராவிடம். பெண் என்பதால் புறக்கணிப்பதைக் காலாவதி ஆக்குவது திராவிடம். இன்னும் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன்... ஆரியத்தை வீழ்த்தும் சக்தி திராவிடத்துக்கு மட்டும்தான் உண்டு. எத்தகைய அந்நியப் படையெடுப்புகளாக இருந்தாலும் - ஆரியப் படையெடுப்புகளாக இருந்தாலும் - அதனை வீழ்த்தும் ஆயுதம் தான் திராவிடம்" என்று முழங்கி இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**எதிரி எந்த வேடம் தாங்கி வந்தாலும் அதனை வீழ்த்தும் வலிமை திராவிடத்துக்கு உண்டு. அது சமூகநீதிக் கோட்பாடு மட்டுமல்ல, சமூக நிர்வாகக் கோட்பாடாகவும் வடிவமைத்துள்ளார் 'திராவிட மாடல்' முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். நூற்றாண்டு காணும் திராவிட இயக்கத்தின் மாபெரும் வளர்ச்சியே இந்த ஆட்சி.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், ஈரக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்திற்கு "செழிப்பு" என பெயரிட்டு விற்பனைக்காக அறிமுகப்படுத்தினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா. பொன்னையா, ஆவடி மாநகராட்சி ஆணையர் க.தர்பகராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.35.79 கோடி மதிப்பில்

# பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் முடிவுற்ற பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மே 13-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (12.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 35 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் பள்ளிகள் புதுப்பிக்கும் பணிகள், 19 புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகள், ஒரு பூங்கா மறுசீரமைக்கும் பணி, 5 புதிய விளையாட்டு திடல்கள் அமைக்கும் பணிகள், 5 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணிகள் ஆகிய முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தார்.

அதன் விபரம் வருமாறு:-

பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை மாநகரின் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் புதிய சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல், சேதமடைந்த சாலைகளை சீரமைத்தல், சென்னை பள்ளிகளை தரம் உயர்த்தும் வகையில் நவீன கட்டமைப்புடன் கூடிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், மக்களின் நலனில் அக்கறை கொண்டு சுகாதாரம், ஆரோக்கியத்தை பேணும் வகையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுதல், பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல், மக்களின் பொழுது போக்கிற்காகவும், மன அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் பசுமையான செடிகள், மரங்களுடன் கூடிய புதிய பூங்காக்கள் அமைத்தல், விளையாட்டை ஊக்கப்படுத்தும் வகையில் விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய விளையாட்டுத் திடல்கள் அமைத்தல், சென்னை மாநகரை தூய்மையாகப் பராமரிக்கும் வகையில் நாள்தோறும் சேகரிக்கப்படும் மக்கும், மக்காத குப்பைகளை தரம் பிரித்து மறுசுழற்சிக்கு உட்படுத்துதல், மழை வெள்ளக் காலங்களில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல், நீர்நிலைகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### பள்ளிகளை புதுப்பிக்கும் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தண்டையார்பேட்டை - சர்மா நகரில் உள்ள சென்னை உயர்நிலை பள்ளி மற்றும் சென்னை தொடக்கப் பள்ளியை 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவிலும், இராயபுரம் - கல்லறைச் சாலையில், மணிகண்டன் தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி மற்றும் சென்னை தொடக்கப் பள்ளியை 4 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவிலும், அண்ணா நகர் - செனாய் நகர், சுப்பராயன் தெருவில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளி மற்றும் சென்னை தொடக்கப் பள்ளியை 4 கோடி ரூபாய் செலவிலும், அடையாறு காந்தி கிராமம், சென்னை நடுநிலைப் பள்ளியை 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவிலும் புதுப்பிக்கப்பட்ட பள்ளிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### பூங்காக்கள் அமைக்கும் பணிகள்

அம்பத்தூர் - வானகரம் சாலை, அத்திப்பட்டில் உள்ள திறந்தவெளி நிலம், டி.ஐ. சைக்கிள் சாலை இரயில் விஹார் குடியிருப்பில் திறந்தவெளி நிலம், தாமிரபரணி தெருவில் உள்ள புது செஞ்சுரி மருத்துவமனை திறந்தவெளி நிலம், எம்ரால்டு பிளாட்ஸ் மின்வாரிய அலுவலகம் அருகிலுள்ள திறந்தவெளி நிலம், நாராயணா நகர் திறந்தவெளி நிலம், டி.வி.எஸ் அவென்யு 34-வது தெருவிலுள்ள திறந்தவெளி நிலம், திருமங்கலம் ரோட்டின் HIG பிளாட்ஸ் திறந்தவெளி நிலம்;

சோழிங்கநல்லூர் - நூக்கம்பாளையம் இணைப்பு சாலை (மைக்ரோ சிப் ஐ.டி நிறுவனம் அருகில்), விநாயகா நகர் மற்றும் ஒக்கியம் துரைப்பாக்கம் பவுண்டரி தெரு; வளசரவாக்கம் - நொளம்பூர் எஸ் & பி கார்டன் 8வது தெரு மற்றும் ராமாபுரத்தில் திருவள்ளுவர் சாலை; மாதவரம் - தாங்கல் கரை சாலை; மாதவரம் - மீனாம்பாள் அவென்யு (சாஸ்திரி நகர்), ஜெய் மாருதி நகர் (மேற்கு), மேட்டூர் இணைப்புச் சாலை (எஸ்.ஐ.எஸ்.) கேப்டவுன்; அடையாறு - லீலா பேலஸ், சோமர்செட், ஜெயின் சகாரீகா, ஆகிய இடங்களில் 9 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 19 புதிய பூங்காக்களையும், சோழிங்கநல்லூர் - சக்தி நகரில் 81 இலட்சம் ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்ட ஒரு பூங்காவையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### புதிய விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் பணிகள்

இராயபுரம் - காத்படா பிரதான சாலையில் உள்ள திறந்தவெளி நிலம், மாதவரம் - மாதவரம் ரிங் ரோடு மற்றும் எம்.ஜி.ஆர். 2-வது தெரு, ஆலந்தூர் - சேதுலட்சுமி அவென்யு, மதுரவாயல் - கங்கா நகரில் உள்ள காந்தி தெரு ஆகிய இடங்களில் 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 புதிய விளையாட்டுத் திடல்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணிகள்

கொடுங்கையூர் வார்டு 35, இராயபுரம் - ராட்லர் தெரு (பெருமாள்பேட்டை) மற்றும் கொண்டித்தோப்பு, திரு.வி.க. நகர் - வ.உ.சி. நகர் 1வது தெருவில் புளியந்தோப்பு, அம்பத்தூர் - முகப்பேர் மேற்கு காளமேகம் சாலை ஆகிய இடங்களில் 10 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா.பொன்னையா, ஆவடி மாநகராட்சி ஆணையர் க. தர்பகராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### செவிலியர் வாழ்வில் ஒளியேற்றிட

# கழக அரசு தொடர்ந்து செயலாற்றிடும்!

## உலக செவிலியர் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, மே 14-

காயமாற்றும் செவிலியர்களின் வாழ்வில் ஒளியேற்றிட கழக அரசு தொடர்ந்து செயலாற்றிடும் என்று உலக செவிலியர் தினத்தையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச செவிலியர்கள் நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**அன்பும் அரவணைப்பும் சேர்த்து நோயாளிகளைக் கனிவுடன் கவனித்து அவர்கள் நலம்பெற சேவையாற்றும் செவிலியர் அனைவர்க்கும் சர்வதேச செவிலியர்கள் நாள் வாழ்த்துகள்!**

**காயமாற்றும் அவர்களது வாழ்வில் ஒளியேற்றிட நமது அரசு தொடர்ந்து செயலாற்றிடும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# 14 திட்டப் பணிகள்: முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

செலவில் விரிவான அபாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்;

ஆலந்தூர் மண்டலம், வார்டு 158 நந்தம்பாக்கம் பகுதியில் அடையாறு ஆற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்காக 4 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர் உந்து குழாய் அமைக்கும் பணிகள்;

பெருங்குடி மண்டலம், உத்தண்டி பகுதி மக்களின் பயன்பாட்டிற்காக 24 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான குடிநீர் வழங்கும் திட்டம்;

சோழிங்கநல்லூர் மண்டலம், ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 73 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான குடிநீர் வழங்கும் திட்டம்;

என மொத்தம் 561 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவிலான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் 14 முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

இராயபுரம் மண்டலம், தண்டையார்பேட்டை "B" உந்துநிலையம் முதல் தண்டையார்பேட்டை "F" கழிவுநீர் உந்துநிலையம் வரை 22 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 750 மி.மீ. விட்டமுள்ள கழிவுநீர் உந்து குழாய்கள் அமைக்கும் பணிகள்;

ஆர்.கே.நகர் மண்டலம், தண்டையார்பேட்டை "F" உந்துநிலையம் முதல் கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் வரை 84 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1000 மி.மீ. விட்டம் கொண்ட கழிவுநீர் உந்து குழாய்கள் அமைக்கும் பணிகள்;

### அம்பத்தூர் மண்டலம்

அம்பத்தூர் மண்டலம், வார்டு84, படவட்டம்மன் தொழிற்பேட்டையில் உள்ள விடுபட்ட தெருக்களுக்கு 3 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், வார்டு85, சிவானந்தா நகர் முதல் குளக்கரை கழிவுநீர் உந்துநிலையம் வரை உள்ள விடுபட்ட தெருக்களுக்கு 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், வார்டு85 மற்றும் 86, எம்.கே.பி நகர் மற்றும் அன்னை சத்யா நகர் ஆகிய இடங்களில் விடுபட்ட தெருக்களுக்கு 13 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டங்கள்;

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் கீழ், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு133, 134 மற்றும் 135 அசோக் நகர், கோடம்பாக்கம், மேற்கு மாம்பலம் பகுதிகளில் 3 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் குழாய்களை விரிவாக்கும் திட்டம்;

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் கீழ், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு137, சூளைப்பள்ளம் பகுதிக்கு 6 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்;

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் கீழ், அடையாறு மண்டலம், வார்டு168, சிட்கோ நகர் கழிவுநீர் உந்துநிலையம் முதல் பாலாஜி நகர் கழிவுநீர் உந்து நிலையம் வரை 1 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 250 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் உந்துகுழாய் அமைக்கும் திட்டம்;

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் கீழ், அடையாறு மண்டலம், வார்டு168, ஆலந்தூர் ரோடு பகுதிக்கு 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்;

சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு200, செம்மஞ்சேரி பகுதிக்கு 50 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டம்;

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் கீழ், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு136, 140, 141 மற்றும் 142 தியாகராய நகர், சைதாப்பேட்டை, மேற்கு மாம்பலம் பகுதிகளில் 9 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் குழாய்களை விரிவாக்கும் திட்டம்;

என மொத்தம் 201 கோடி ரூபாய் செலவிலான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் 9 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா. பொன்னையா, ஆவடி மாநகராட்சி ஆணையர் க. தர்பகராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.